1992 மார்ச் 25]

திரு. ஜி. பழனிசாமி, தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

'' தமிழ் வளர்ச்சி—பண்பாடு பற்றிய 52 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 5,57,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''

என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26—3—1992) காலை 9—30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—47 மணிக்கு ஒத்தி வைக்சப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

36. 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்த சிறப்பு மேல்முறையீட்டு நடுவர் மன்ற விதிகளை வகுப்பது குறித்து வருவாய்த் துறையின் 29—10—1990-ஆம் நாளிட்ட 2233-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1992 மார்ச் 25

37. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 1989–90-ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகளின்மீதான தணிக்கை அறிக்கை. [1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

45. 1992–93-ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்).

46. 1992–93-ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

47. 1991–92-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

48. 1991–92-ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

49. 1991–92-ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து நிதி அமைச்சர், மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

50. கோரிக்கை எண். 47—செய்தி—திரைப்படத் தொழில் நுட்பவியல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1992–93. (தமிழ், ஆங்கிலம்)

51. கோரிக்கை எண். 51—சுற்றுலா குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1992–93. (தமிழ், ஆங்கிலம்).

52. கோரிக்கை எண். 52—தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1992–93. (தமிழ், ஆங்கிலம்).

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS